[1994 மார்ச் 18

திரு. கா. பூ. முனுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் தமிழ்நாட்டிலேயிருக்கிற ஒட்டுமொத்தமான சீதோஷ்ண நிலைக்கேற்ப உரிய மரங்கள் அத்தனையையும் இங்கே கூறியிருக்கிறார்கள். தர்மபுரி மாவட்டத்திற்கேற்ற வகையிலே என்னென்ன மரங்கள் நடப்படுகின்றன என்பதையும், அதே நேரத்தில் இப்படி சமூக நலக் காடுகளின் வாயிலாக நடப்படுகின்ற மரங்களால் எந்த அளவிலே அரசுக்கு வருவாய் வருகிறது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1981 முதல் 88 வரை முதல் கட்ட திட்டமாக சுமார் 8,543 ஹெக்டேர் நில அளவு இந்தச் சமூகக் காடுகள் உருவாக்கப்பட்டன. அதற்குச் செலவுகள் 80 இலட்சத்து 65,000. அதைப் பராமரிப்பதற்கு 13 இலட்சத்து 29,000 ஆனது. ஆனால், அரசுக்கு அதன் மூலம் 190 இலட்சம் ரூபாய் வருமானம் கிடைத்திருக்கிறது. அதுபோன்று, இரண்டாம் கட்டத் திட்டமாக 1988 முதல் 93 வரை 210—1,302 ஹெக்டேரில் 42,76 இலட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டு உருவாக்கப்பட்டது. 10.2 இலட்சம் ரூபாய் இதற்காகப் பராமரிப்புச் செலவு ஆனது. 138 இலட்சம் ரூபாய் அளவு வருமானம் வந்திருக்கிறது. அதுபோன்று, தர்மபுரி மாவட்டத்தைப் பொறுத்தவரையிலே, இடைபடு காடுகள் திட்டம் ஒன்று, சிடா நிறுவனத்தினுடைய உதவியோடு செயலாற்றப்பட்டு வருகிறது. அதன் மூலமாகத் தர்மபுரி மாவட்டத்திலுள்ள திருமால்வடி, பீலஹனபள்ளி, நல்லூர், தரமஹபள்ளி, வேப்பனம்பள்ளி, பீஜப்பள்ளி, சனமாவூர், அனமந்தபுரம், கோமணவள்ளி, போன்ற, இடங்களில் எல்லாம் இது நிறைவேற்றப்பட்டு வருகிறது. இந்த இடங்களிலும் சீதோஷ்ண நிலைமைக்கு ஏற்பதான், இந்த மரங்கள் வளர்க்கப்படுகின்றன என்பதோடு, பர்கூர் பகுதியில்....... (மணியடிக்கப்பெற்றது)

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன் அனுமதியோடு, வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ் : பர்கூர் பகுதியில், சுண்டமலைக்காட்டில் 130 ஏக்கரா அளவில் மரத் தீவனங்கள் உற்பத்தி இன்றைக்கு உருவாக்கப்பட்டிருக்கிறது. அதற்காக, 6.5 இலட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டது. அண்மையிலே, நம்முடைய உலக, வங்கியினுடைய Senior Forest Specialist திரு. கோதா கிர்தா, லோடா போன்றவர்கள் எல்லாம் வருகை புரிந்து, பார்வையிட்டு, இந்தியாவிலே மிகச் சிறந்ததான மரத் தீவனங்கள் அங்கு உருவாக்கப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள் அதற்குக் காரணம், 'இடைபடு காடுகள்' என்று சொன்னால், அழிக்கப்பட்ட காடுகளுக்குப் பக்கத்திலேயே இவை

1994 மார்ச் 18]

உருவாக்குவதன் மூலம், கால்நடைகளை வனப் பகுதிக்கு விடாது, அங்கிருக்கிற விவசாயப் பெருமக்களுக்கு, கால்நடைகளுக்குத் தேவையான மரத் தீவனங்களைக் கொடுக்கிற அளவு இவை உருவாக்கப்படுகின்றன என்பது மட்டுமல்ல; அதற்குப் பிறகு நம்முடைய SIDA இந்த ஆண்டு 1993–94 ஆம் ஆண்டு, 17.59. கோடி ரூபாய் உதவி செய்திருக்கிறார்கள். சமூகக் காடுகள் திட்டத்திற்காகவும் உதவி செய்திருக்கிறார்கள். அதைத் தவிர்த்து, 1995-லிருந்து 2000 ஆம் ஆண்டு வரை, சுமார் 60 கோடிக்கு ஒரு திட்டத்தையும் 'SIDA' ஏற்றிருக்கிறது என்பதோடு, தமிழகத்தில் இந்த சமூக வனக் காடுகள் உருவாவதை, உலக வங்கி பாராட்டியிருக்கிறது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர், வினா எண் 34, திருமதி அ. தி. சரஸ்வதி, மாண்புமிகு வனத் துறை அமைச்சர்.

34—

கெம்பன்நாயக்கன்பாளையம்— கடம்பூர் சாலையை செப்பனிட்டு பராமரித்தல்

*10683—திருமதி அ. தி. சரஸ்வதி :

மாண்புமிகு வனத்துறைஅமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கெம்பன்நாயக்கன்பாளையத்திலிருந்து கடம்பூர் வரை உள்ள தார் சாலையை வனத்துறையிடமிருந்து நெடுஞ்சாலைப் பணித்துறைக்கு ஒப்படை செய்து செப்பனிட்டுப் பராமரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ், வனத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கெம்பன்நாயக்கன் பாளையத்திலிருந்து கடம்பூர் வரை உள்ள வனத்துறைக்குச் சொந்தமான தார்ச் சாலையை நெடுஞ் சாலைப் பணித்துறைக்கு ஒப்படை செய்து பராமரிக்கும் உத்தேசம் அரசிற்கு இல்லை.

திருமதி. அ. தி. சரஸ்வதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கெம்பன்நாயக்கன் பாளையத்திலிருந்து கடம்பூர் வரை உள்ள தார்ச் சாலையை, வனத் துறையிடமிருந்து நெடுஞ் சாலைப் பணித்துறைக்கு ஒப்படைப்புச் செய்தால், அங்கு பராமரிப்பு நன்கு கவனிக்கப்படும். ஏற்கனவே, இந்த ரோடு பற்றி, நாங்கள் அமைச்சரிடம் கூறியிருக்கிறோம். அவசர சிகிச்சைப் பெற வேண்டுமானால், உடனடியாக அந்த வழியில் வர

முடியாது. அந்த மலைப் பகுதிக்கு உடனடியாக ரோடு போட வில்லை என்றால், மலைவாழ் மக்கள் கீழே வரமுடியாத நிலை ஏற்படும். எனவே, அமைச்சர் அவர்கள் இதனை மறுபரிசீலனை செய்து, வனத்துறையிடமிருந்து, நெடுஞ்சாலைப் பணித் துறைக்கு அந்த தார்ச் சாலையை ஒப்படைப்புச் செய்ய ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டம், கோபி வட்டம், சத்தியமங்கலம தொகுதி, கெம்பன்நாயக்கன் பாளையத்தில் இருந்து கடம்பூர் வரை செல்லும் சாலையானது வனத்துறைக்கு முழுவதுமாகச் சொந்தமானதாகும். மேற்கண்ட சாலையின் இருமருங்கிலும், அடர்ந்த காடுகள் உள்ளன. இச்சாலை ஒதுக் குக் காட்டுப் பகுதி வழியாகச் செல்கிறது. இப்பகுதியில் மிக விலையுயர்ந்த சந்தன மரங்கள் உள்ளன. மற்றும் வன உயிர் ங்கள் வசித்து வருகின்றன. ஆகு, இன்றைக்கு இருக்கிற சூழ்நிலையில் மத்திய அரசின் புதிய சட்டத்தின் அடிப்படையில், மைய அரசின் அனுமதியின்றி வனச் சாராப் பணிகளுக்கு, எந்த ஒரு வனப் பகுதியையும் பயன்படுத்த முடியாது என்கிற கார ணத்தால்தான், அது நடைமுறைக்குச் சாத்தியம் இல்லை என் பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள் கிறேன்.

திருமதி அ. தி. சரஸ்வதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சாத்தியம் இல்லை என்று கூறி னாலும், இந்தத் திட்டம் இந்த ஆண்டே துவக்கப்படுமா என் பதை அமைச்சர் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈடுசெய் வன வளர்ப்புத் திட்டம்" என்கிற ஒரு திட்டத்தின் அடிப்படையில், சாலைகள் செப்பனிட முடியும். இதனுடைய அடிப்படையில், இந்தத் திட்டத்தை ஏற்று, அந்தச் சாலையைச் செப்பனிடுவதற்காக நெடுஞ்சாலைத் துறையோடு, வனத்துறை வேண்டியது. நெடுஞ்சாலைத் துறை, அச்சாலையை வனத்துறையிலேயே வைத்துக்கொண்டு பரா மரிப்புச் செய்துகொள்ளுமாறு, தலைமைப் பொறியாளர் 20—7—1992 அன்று ஆலோசனை தெரிவித்துள்ளார். அதற்குப் பிறகு, வனத்துறை, அதனுடைய செலவு என்னவாகும் என் பதைக் கணக்கிட்டுப் பார்த்ததில், 6 இலட்சம் ரூபாய் தேவைப்படுகிறது என்பதைத் தெரிந்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய இந்தக் கேள்வியை மையமாக வைத்து அதனை நம்முடைய திட்டப் பிரேரணையில் இணைத்துக் கொண்டு, அந்தச் சாலையைச் செப்பனிடுவதற்காக, வனத்துறை நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.